**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி**

**முன்னிலை: திருமதி.V.சிவகாமசுந்தரி, பி.ஏ.,பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, அறந்தாங்கி.**

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 28-ம் நாள் சனிக்கிழமை

**IA No.08/2026**

**In**

**RCOP.No.04/2018**

வை. தமிழரசன், .......**மனுதாரர்/எதிர்மனுதாரர்**

**//எதிர்//**

1) முருகேசன்,

2) நாகரெத்தினம் (இறந்தார்),

3) வீரமணி, .......**எதிர்மனுதாரர்கள்/மனுதாரர்கள்**

4) வருவாய் வட்டாட்சியர்,

வட்டாட்சியர் அலுவலகம்,

அறந்தாங்கி.

5) வருவாய் கோட்டாட்சியர்,

வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,

அறந்தாங்கி.

6) மாவட்ட ஆட்சியர் அவர்கள்,

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,

புதுக்கோட்டை. ........**எதிர்மனுதாரர்கள்/4 முதல் 6**

**உத்தேச பிரதிவாதிகள்**

இந்த மனுவானது இந்த நீதிமன்றத்தில் என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.C.ஜெகதீசன்.,M.L., அவர்கள் முன்னிலையாகியும், 1,2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.M.S..செந்தில்குமார்.,B.Sc.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், இந்த மனு சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களும் இந்த நீதிமன்றத்தினால் நன்கு கவனமாக பரிசீலனை செய்யப்பட்டும், இந்நாள் வரையில் என் சீரான பரிசீலனையில் இருந்து, இன்று இந்த நீதிமன்றம் வழங்கும்.

**உத்தரவு**

இந்த மனுவானது மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பில் கடந்த 10.03.2026-ம் தேதியன்று தள்ளுபடியான IA.07/2025 மனுவை மீண்டும் கோப்பில் எடுக்க வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 09 விதி 09-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்:-**

மேற்படி IA.07/2025 மனுவில் கடந்த 10-03-2026-ம் தேதியன்று மனுதாரர் தரப்பில் உத்தேச பிரதிவாதிகளுக்கு படி செலுத்த வாய்தா போடபப்பட்டிருந்தது. ஆனால் மனுதாரருக்கு கடந்த 08-03-2026-ம் தேதி முதல் கடுமையான ஜூரமும், வயிற்றுப்போக்கும் ஏற்பட்டு சிகிச்சை பெற்று வந்ததால் வழக்கறிஞரை சந்தித்து வழக்கு பற்றி விபரம் கூற முடியாமல் போய்விட்டது. தற்சமயம் தான் அவரை சந்தித்து வழக்கு பற்றி விபரங்களை கேட்டபோது தான் மேற்படி மனுவில் படி செலுத்த வய்தா போடபப்பட்டு கடந்த 10-03-2026-ம் தேதியில் மனுதாரர் தரப்பில் படி செலுத்தவில்லை காரணத்தால் மனு தள்ளுபடி செய்யபட்டுள்ள விபரம் தெரிய வந்தது. எனவே, மேற்படி மனுவில் கடந்த 10-03-2026-ம் தேதியில் மனுதாரர் தரப்பில் படி செலுத்தாத காரணத்தால் மனுதாரருக்கெதிராக தள்ளுபடி மனுவினை மீண்டும் கோப்பில் எடுக்க அனுமதியளித்து உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு 2ம் எதிர்மனுதாரரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம் :-**

கடந்த 14.10.2025-ம் தேதி மனுவில் கண்ட உத்தேச தரப்பினர்களுக்கு அறிவிப்பு அனுப்ப படிகட்டுவதற்கு வாய்தா போடப்பட்ட நிலையில் மனுதார் தரப்பில் முறையாக படி செலுத்தாத காரணத்தால் கடந்த 21.11.2025-ம் தேதியில் படி திருப்பட்ட பின்பு 15.12.2025-ம் தேதியில் மீண்டும் படி செலுத்தாமலும் பின்பு 7.1.2026-ம் தேதியில் வாய்தா போடபப்பட்டிருந்த நிலையில் அன்றைய தேதியில் படி செலுத்தாமலும், பிறகு 27.01.2026-ம் தேதியில் போடப்படிருந்த வாய்தாவிற்கு மனுதார் தரப்பில் படி செலுத்தி வைத்தும் அந்த படியும் முறையாக நீதிமன்றத்திற்கு வரவில்லை. சரியான முகவரி குறிப்பிடாத காரணத்தால் படி திருப்பப்பட்டும் இறுதியாக 18.02.2026-தேதியில் தரப்பில் மனுதார் உத்தேச தரப்பினர்களுக்கு படி செலுத்துவதற்கு எவ்வித நடவடிக்கையும் இல்லாத காரணத்தால் மனு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவான தற்பொழுது IA No: 7/25-ஐ மீண்டும் Restore செய்ய மனு செய்திருப்பதற்கு எவ்வித நியாயமான காரணங்களும் மனுதார் தரப்பில் மனுவில் சொல்லப்படவில்லை என்பதாலும், அசல் மனுவான RCOP.4/2018 ஆனது கடந்த 11.08.2025 ம் தேதி போடப்பட்ட நிலையில் தற்பொழுது கடந்த 8 மாத காலமாக அசல் மனுவை

SIVAGAMASUNDARY V

Digitally signed by SIVAGAMASUNDARY V
Date: 2026.03.28 22:02:36 +0530

இழுத்தடிக்க வேண்டுமென்ற தவறான எண்ணத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே மனுதாரரின் மனுவை இந்த எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது என கட்சி செய்யப்பட்டுள்ளது.

**3. தற்போது இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய முக்கிய சங்கதி யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதாகும்.**

இந்த மனுவானது கடந்த 10.03.2026 ம் தேதி தள்ளுபடியான வழக்கிடை மனு எண். 07/2025 யை மீண்டும் கோப்பில் எடுக்க வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுதாரர் தனது மனுவில் கடந்த 08.03.2026 முதல் கடுமையான ஜூரம் மற்றும் வயிற்றுப்போக்கினால் பாதிக்கப்பட்டுள்ளதால் 10.03.2026 ம் தேதியன்று படி கட்ட தவறிவிட்டதாக கட்சி செய்யப்பட்டுள்ளது.

எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த எதிருரையில் மேற்படி மனுவானது 17.10.2025 ம் தேதியில் உத்தேச தரப்பினர்களுக்கு அறிவிப்பு அனுப்ப படி கட்ட வாய்தா போடப்பட்டுள்ள நிலையில் மனுதாரர் தரப்பில் முறையாக படி செலுத்தாத காரணத்தினால் 21.11.2025-ம் தேதி படி திருப்பப்பட்ட பின்பு 15.12.2025-ல் மீண்டும் படி செலுத்தாமல் வாய்தாக்கள் போடப்பட்டு இறுதியாக மனுதாரர் தரப்பில் Representation இல்லாத காரணத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், மேற்படி மனு அசல் மனுவை 8 கால மாதமாக இழுத்தடிக்க வேண்டுமென்று தவறான நோக்கத்தில் தாக்கல் செய்யப்பட்டிருப்பதாகவும், மேற்படி மனு எண்.07/2025 என்பது அசல் RCOP மனுவில் கண்ட எதிர்மனுதாரரால் மனு சொத்து மன்னான்குளம் ஆக்கிரமிப்பு என்றும், அதில் அரசு தரப்பினரான உத்தேச 4 முதல் 6 தரப்பினர்களாக சேர்க்க வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் உத்தேச தரப்பினர்களுக்கு படி கட்டாததால் மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேற்படி மனுவில் சொத்தின் உரிமைமூலம் பற்றிய சங்கதி எழுப்பப்பட்டிருப்பதால் அதை பொறுத்து தீர்மானிக்க வேண்டியது அவசியமானதாகும். எனவே மேற்படி மனுவை மீண்டும் கோப்பிற்கு எடுக்க வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

இருப்பினும் மனுதாரரால் ஏற்பட்ட காலதாமதத்தினை கருத்திற்கொண்டு இம்மனு செலவுத்தொகையுடன் அனுமதிக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

SIVAGAMASUNDARY V

Digitally signed by SIVAGAMASUNDARY V
Date: 2026.03.28 22:02:28 +0530

முடிவாக இம்மனு ரூ.1,000/- செலவுத்தொகையுடன் கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

1) மேற்படி செலவுத்தொகையை மனுதாரர் எதிர்மனுதாரர் வசம் எதிர்வரும் 10.04.2026 க்குள் செலுத்திவைக்க வேண்டுமென்றும்,

2) வழக்கிடை மனு எண்.07/2025-ல் கண்ட உத்தேச தரப்பினர்களுக்கு அறிவிப்பு அனுப்ப எதிர்வரும் 10.04.2026-ம் தேதி வாய்தா அன்று படி கட்ட வேண்டும் என்ற நிபந்தனைகளுடனும்,

மேற்படி நிபந்தனைகளை மனுதாரர் தரப்பில் நிறைவேற்றவில்லை என்றால் இம்மனு தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு பின் அவரால் நேரடியாக கணினி சாதனத்தில் பதிவு செய்யப்பட்டு பின் என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 28-ம் நாள் என்னால் கையொப்பம் செய்யப்பட்டு இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**ஒம்/-V.சிவகாமசுந்தரி**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அறந்தாங்கி.**

**சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் பட்டியல்:-**

**மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**: இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி**: இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்** : இல்லை

**//உண்மை நகல்//**

SIVAGAMASUNDARY V

Digitally signed by SIVAGAMASUNDARY V
Date: 2026.03.28 22:02:17 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**அறந்தாங்கி.**

**வரைவு/செவ்வை உத்தரவு**

**I.A.No.08/2026**

**RCOP.No.04/2018**

**நாள்.28.03.2026**

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**

**அறந்தாங்கி.**